**<u>அ.சா. 2 திரு வெங்கடேசன் த/பெ. ராஜேந்திரன் வயது 51</u>**

சாட்சி ஆஜர் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

**<u>சாட்சி மனுவின் பேரில் மீண்டும் வரவழைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை – (எதிரி மனுவின் பேரில் ஆஜரில்லை)</u>**

நான் வாணியம்பாடியில் உள்ள தனியார் பள்ளியில் ஆசிரியராக பணியாற்றி வருகிறேன். நான் புகார்தாரரின் மருமகன் என்றால் சரிதான். நான் ஆரம்ப காலத்திலிருந்து வாணியம்பாடியில் தான் குடியிருந்து வருகிறேன். நான் தாக்கல் செய்துள்ள சத்திய பிரமாண வாக்குமூலத்தில் எனக்கும் புகார்தாருக்கும் என்ன உறவு முறை என்று நான் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். எனக்கு திருமணம் ஆகி 20 வருடங்கள் ஆகிவிட்டது. என் மாமனார் வீட்டில் சரஸ்வதி என்ற பெயரில் ஒரு நபர் இருந்தாரா என்றால் அவ்வாறு எந்த நபரும் இல்லை. புகார்தாரர் சரஸ்வதி என்பவருடன் வாழ்ந்து வந்தார் என்றால் சரியல்ல. சரஸ்வதி என்ற பெயரில் புகார்தாரர் வீட்டில் யாரும் இல்லை என்றால் சரிதான். 1ம் எதிரி சரஸ்வதி என்பவரின் சகோதரர் என்றால் சரிதான். ஆனால் அந்த விவரம் பணம் கொடுத்த பின்பு தான் தெரியவந்தது. புகார்தாருக்கும் 1ம் எதிரிக்கும் ஒரு வீடு சுவாதின அடமான விவரம் சம்மந்தமாக அவர்களுக்குள் பணப்பரிவர்த்தனை இருந்த விவரம் தெரியுமா என்றால் தெரியாது. மாது என்பவருக்கும் 1ம் எதிரிக்கும் பல பண கொடுக்கல் வாங்கல் இருந்தது தெரியுமா என்றால் தெரியாது. எதிரி பணத்தை வாங்கி எண்ணி பார்த்ததை நான் வீடியோ எடுத்தேனா என்றால் இல்லை. எனவே, நான் இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ள வீடியோ இவ்வழக்கு காசோலைக்கு சம்மந்தமானது அல்ல என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் நான் தாக்கல் செய்துள்ள சத்தியபிரமாண வாக்குமூலத்தில் பூர்த்தி செய்தாக மட்டுமே குறிப்பிட்டுள்ளதாக என்றும் என்ன பூர்த்தி செய்யப்பட்டுள்ளது என்று குறிப்பிட்டு கூறவில்லை என்றால் ரூ. 20 லட்சம் பெற்றுக்கொண்டு பூர்த்தி செய்து கையொப்பம் இட்டதாக தெரிவித்துள்ளேன். நான் கூறுவது போல் என்ன பூர்த்தி செய்யப்பட்டது என்று சத்தியபிரமாண வாக்குமூலத்தில் தெரிவிக்கவிலலை என்றாலும், நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல, என்ன காரணத்திற்காக பணம் வாங்கப்பட்டது என்ற விவரம் சத்திய பிரமாண வாக்குமூலத்தில் நான் குறிப்பிடவில்லை என்றால் கடனாக பெற்றதாக குறிப்பிடப்பட்டுள்ளது. என்ன காரணத்திற்காக கடன் பெற்றார் என்ற விவரம் தெரிவிக்கவில்லை என்றால் சரிதான். புகார்தாரர் தாக்கல் செய்த வழக்கறிஞர் அறிவிப்பு, புகார், முதல் விசாரணை ஆகியவற்றில் நான் கூறிய விவரங்களை தெரிவிக்கவிலலை என்றாலும், எனவே, வழக்கிற்காக ஜோடனையாக தயார் செய்யப்பட்ட சாட்சி நான் என்றாலும் சரியல்ல. எனவே எனது சாட்சியம் ஏற்கதக்கது அல்ல என்றால் சரியல்ல. அதன் காரணமாக தான் எனக்கும் புகார்தாருக்கும் உள்ள உறவு முறையை நான்

வேண்டுமென்றே மறைத்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரி புகார் தாரரிடம் ரூ. 20 லட்சம் பெறவில்லை என்றாலும், ரூ. 3 லட்சம் மட்டுமே பெற்றார் என்றாலும் சரியல்ல.

**<u>மறுவிசாரணை – இல்லை</u>**

| |
|---|
| Taken down by me/before me in open Court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.<br><br>Signature of Witness Judicial Magistrate No.I<br>Tirupathur. |